ஸ்ரீ

ல ம். சங்க

ம்.

உ

செய்யாறு தாலூக்கா

புதுப்பாளையம்

# சமரஸ சன்மார்க்க சங்க லைப்ரெரி

நெம்பர்

பெயர்

காஞ்சீபுரம்

யுனைட்டெட் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1920.

உ

ஓம்.

தத்சத்

பரப்பிரம்மணேநம:.

இஃது

செய்யார் தாலூக்கா

புதுப்பாளையம்

தரும, திராவிட கலாசாலை (லைப்ரேரி)யில்

ஸ்தாபித்துள்ள

சமரஸ, சன்மார்க்க சங்கத்தின்

# சட்டப்புத்தகம்.

இது

22-2-1919ல் கூடிய

ஷை சங்கமஹாசமாஜத்தின்

ஆமோதிப்பின்படி

ஷை சங்கத்தின் காரியதரிசியும்

தமிழ்ப்பண்டிதருமாகிய

ஸ்ரீமான் ப. மாசிலாமணி முதலியார்,

அவர்களால்

காஞ்சிபுரம்


யுனைட்டெட் பிரிண்டிங் ஒர்க்ஸ்,

பதிப்பிக்கப்பட்டது.

1920



சம்பந்தர்,



அப்பர்,



சுந்தரர்,



மாணிக்கவாசகர்.

உ

கடவுடுணை.



# முகவுரை

பூவுலகிற் பொலிந்திலங்கும் ஜீவகோடிகள் யாவும் சுகத்தையே யடைய விரும்புகின்றன வென்பது மிகப்பிரசித்தமாம். சுக மென்பது யீண்டு நிரதிசயாநந்த மெனக்கொள்ளத்தக்கது. இகபர சுகங்கள் ஒருகாலத்திலழிந்து போகுந் தன்மைத்தா மாகலின் அவை பரமசுகவடிவ முத்தியன்றாம். ஜீவகோடிகள் இச்சிப்பதோ என்றும் சிதையாத பரம சுகமாம். இத்தகைய நித்தியாநந்தப்பெருவாழ்வைப் பெறுதற்குச்சாதனங்களாயுள்ளவை "சத்துக்கள் சங்கமதும் சாத்திரத்தின் ஆராய்வும் முத்திக்கு வித்தாம் முதல்" என்னும் ஆன்றோர் திருவாக்கால், சாது சங்கமும் ஞானநூல் ஆராய்ச்சியுமா மென்பது நன்கு விளங்குகின்றது.

2. ஆதலின் மேற்கூறிய சாதனங்களுளொன்றாய ஞானநூல் ஆராய்ச்சியானது அதிகாரி பேதம் பற்றிப்பல படித்தாய் விரிந்துள தாதலின் அவற்றுள் யாவையும் ஒருங்குசேகரிப்பது ஒவ்வொருவருக்கும் அசாத்தியம் ஆகவே, "பலதுளி பெரு வெள்ளம்." எனும்பழமொழிக்கேற்றபடி சேகரிக்கின் அசாத்தியமானதும் சுலபசாத்தியமாய் முடிவுபெறு மாதலால் பொதுவாய் தரும, திராவிட கலாசாலை என்னும் ஒருபுத்தகசாலையும்,

மற்றொரு சாதனமாய சாதுக்களின் கூட்டுறவிற்குக் காரணமான, சமரஸ சன்மார்க்க சங்கமென்னும் ஒருசங்கமும், நார்த் தார்காடு டிஸ்டிரிக்கட்டு செய்யாறு தாலூக்கா புதுப்பாளையம் என வழங்கும் பொதியர் பாளையம் கிராமத்தில் ஸ்தாபிக்கப் பட்டு சுமார் 5 வருடகாலமாய் இறைவனருளால் நிலவிவருகின்றன.

3. ஷை புத்தகசாலையும் சங்கமும் முன்னினும் அதிகமாய் தழைத்தோங்க வேண்டுமென்னும் உத்தேசத்துடன் அதிக மெம்பர்களைச் சேர்க்கவும், மூலதனத்தை விர்த்தி செய்யவும், 22-2-19ல் ஒரு மஹா சமாஜம் கூட்டப்பெற்றது.

4. அச்சபையில் தீர்மானிக்கப்பட்ட சட்ட திட்டங்களும் ஷை புத்தகசாலை, சங்கங்களின் பூர்வகாலஸ்திதியும், இதில்கூறப் பட்டுள்ளன.

5. மேற்கண்ட உத்தேசம் முற்றும் முட்டின்றி முடியும் பொருட்டு இதைச்சேர்ந்த ஒவ்வொரு மெம்பர்களும் பல மெம்பர்களைச்சேர்த்து தருவதுடன், தாங்களும் ஷை சங்க காரியங்களில் தளராஉத்ஸாகத்துடன் ஒத்து உழைப்பார்களென மிகவும் பிரார்த்திக்கப்படுகிறது.

6. இதுகாறும் ஷைபுத்தகசாலையும், சங்கமும் செவ்வனே நடந்தேற அருள்புரிந்த எல்லாம்வல்ல எழிற்குமரேசன், இஃதென்றும் நிலைபெற்றிலங்கு மாறும் இன்னருள்புரிய அவர் பாதாம்புயங்களை சந்ததமும் பணியாநின்றனன்.

இங்ஙனம்: விதேயன்,

ந. சுப்பிரமணிய ஐயர்,

சங்க அக்கிராசனர்.

# சங்கத்தின் பூர்வஸ்திதி.

## (அதாவது 22-2-19-க்கு முன்னுள்ள சங்கத்தின் நிலைமை.)

1. 27-11-14க்குச்சரியானதமிழ் ஆநந்தஸ்ரீ கார்த்திகைமீ 12உ சுக்ரவாரம் காலை தனசு லக்கினத்தில் செய்யார் தாலூக்கா புதுப்பாளைய மென்னும் பொதியர்பாளையம் கிராமத்தில் ஒரு புத்தக சாலையானது, தரும, திராவிட கலாசாலை (லைப்ரெரி) எனும் தலைப்பெயருடன், நார்த்தாற்காடு டிஸ்டிரிக்கட்டு, ஸ்கூல் அஸிஸ்டெண்டு இனிஸ்பெக்டர் பிரம்மஸ்ரீ. துரைசாமி ஐயரவர்களால், ஒருவாடகை வீட்டில் ஸ்தாபிக்கப்பட்டது. அவ்வமயம் முதன் முதல் உபந்யசித்தவர் ஷெயூர் போர்டுஸ் கூல் ஹெட்மாஸ்டர் பிரம்மஸ்ரீ சுத்தஸத்வம் தாசரதி வேதாந்த ராமாநுஜாசாரியர் அவர்கள்.

2. இவ்விடத்தில் ஒருபுத்தகசாலையை ஸ்தாபிப்பது தகுதி யானதென்று அபிப்பிராயம் தந்தவர்கள் 1 ஷை பிரம்மஸ்ரீ. துரைசாமி ஐயரவர்கள், 2 சென்னை சர்வே 6-வது பார்டி டிப்டி டைரெக்டராயிருந்து காலம் சென்ற பிரம்மஸ்ரீ. நார ணய்யரவர்கள். 3 சென்னை இந்து தியாலாஜிகல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதரும், லோகோபகாரிப் பத்திராதிபரும் ஆகிய ஸ்ரீமான் கோ. வடிவேலுச்செட்டியாரவர்கள். 4 சென்னைகார்ப் பொரேஷன் மாடல்ஸ்கூல் ஹெட்மாஸ்டர் பிரம்மஸ்ரீ ந. சுப்பிர மணிய ஐயரவர்கள் 5. வேலூர் டி. மு. கோர்ட்டு கிளார்க்கு பிரம்மஸ்ரீ. கிருஷ்ண சர்மா அவர்கள்.

3. உலகைமுன் னேற்றத்திற் கேதோ,ருயர் வித்தாமென, இதைப்பற்றி முதன் முதல் உத்தேசித்து ஷை பெரியோர்களைக்

கலந்து எவற்றிலும் முன்னின்று நன்முயற்சியுடன் ஸ்தாபித்து [illegible] நம், இதுகாறும் ஷை (சங்கம்) சாலையின் தலைவராக [illegible] துசரிவர நடாத்தி வந்தவரும், யூர்ஷை தமிழ்ப்பண்டிதர், ஸ்ரீமத் ப. மாசிலாமணி முதலியாரவர்கள்.

4. இதனை ஸ்தாபிக்க உத்தேசித்தது முதல் இதுவரை எல்லாவிஷயங்களிலும், ஷை யாருடன் ஒத்துழைத்து வந்தபழைய மெம்பர்கள். ஷையூர்

ம-௱-௱-ஸ்ரீ ம. க. நடேச முதலியார்.
,, சோ. தங்கவேல் முதலியார்.
,, க. பரசுராம முதலியார்.
,, சு. நடராஜ முதலியார்.
,, க. குப்புசாமி முதலியார்.
,, வி. இரங்கசாமி முதலியார்.
,, அ. வேதாசல முதலியார்.
,, அ. இரங்கசாமி முதலியார்.
,, திரு. முனிசாமி முதலியார்.
,, க. ஆதிமூல முதலியார்.

5. இதை ஸ்தாபித்தது முதல் இதுவரை ஷையார்களுடன் சரீர சகாயம் செய்து ஒத்துழைத்தவர்கள் ம-௱-௱-ஸ்ரீ திருநாராயணசாமி முதலியார், ம-௱-௱-ஸ்ரீ சு. மாசிலாமணி முதலியார், ம-௱-௱-ஸ்ரீ வ. ரா. பச்சையப்ப முதலியார்.

6. இப்புத்தகசாலை ஸ்தாபிக்கப்பட்டகாலத்தில்அருணாசல முதலியார் குமாரர், ம-௱-௱-ஸ்ரீ அ. வேதாசல முதலியாரால் நெடால் சிவநேசத் திருக்கூட்டச் சபையாரிட மிருந்து சேகரித்தனுப்பிய, ரூபா 50-க்கும், ஷை சாலைக்கு வேண்டிய பீரோ முதலிய சாமான்கள் வாங்கிவைக்கப்பட்டன, இதற்காகச் சங்கம் ஷையார் மாட்டு நன்றிபாராட்டுகிறது.

7. ஷை சாலைக்காக ஷையூர் திருவேங்கடமுதலியார் குமாரர் ம-௱-௱-ஸ்ரீ முனிசாமி முதலியார் தான் குடியிருக்கும் வீட்டில் ஒருபாகத்தை சாசன பூர்வகமாய் ஷை புத்தகசாலைக்குத் தானம் செய்திருக்கிறார். இதற்காக ஷை சங்கம் என்றென்றும் நன்றியறிதலுடையதா யிருக்கிறது.

8. 20-11-15ல் நடந்த சங்க வருஷமஹோற்சவ காலத்தில் மஹா சபையார் அபிப்பிராயப்படி. இச்சங்கத்திற்கு ஒரு தனிப்பெயரில்லாதிருப்பதுகண்டு, ஷை சங்கமதுவரையில் நடந்துக்கொண்டநடையைச் சீர்தூக்கி "சமரஸ சன்மார்க்க சங்கம்" என்னும் பெயரை பிரம்மஸ்ரீ. ந. சுப்ரமணிய ஐயரவர்கள், சூட்டினார்கள்.

9. இதுகாறும் இச்சங்கம். பலபண்டித சிகாமணிகளாலும் தக்க உத்தியோகத்தினர்களாலும், சுமார் 70 யோக்யதா பத்திரங்களைப் பெற்றுள்ளது.

10. இப்புஸ்தகசாலையி லிப்போது சுமார் 270 ரூபாய் மதிப்புள்ள 475 புத்தகங்கள் இருக்கின்றன. இவையனைத்தும் தக்கார்க ளொவ்வொருவராலும் தானமாகக் கொடுக்கப்பட்ட தக்க நூல்களாகும்.

11. இச்சங்கத்தார் விசேஷகாலங்களில் உள்ளூரிலும் வெளியூர்களிலும் சென்று சத்விஷய, கௌரவ உபந்யாசங்கள் பல செய்து வந்தார்கள், இத்துடன் உள்ளூரில் சிலபிள்ளைகளுக்குத் தேவார, திருவாசக, திருவாய்மொழி, திருப்புகழ், சங்கீர்த்தன, முதலியன, பண்ணுடன், ஓதுவித்தும், சிலர்க்குநீதிநூல்களைகற்பித்தும், பகற்காலத்தில் படிக்க முடியாத சில ஏழைப்பிள்ளைகளுக்கு இரவில்கல்விகற்பித்தும் வந்ததுடன், பலமாதாந்தர சஞ்சிகைகளும், வர்த்தமான பேப்பர்களும் வரவழைத்து விளக்கியும், ஷை சஞ்சிகை பேப்பர்களுக்கு விஷயதானமும் புரிந்து வந்திருக்கின்றனர். மீதன்றி திருக்கூட்டத்துடன் பல தலயாத்திரை சென்று பல,பக்திரஸ நூல்களை புதிதாய்ப்பரவச் செய்து மிருக்கின்றனர்.

மேற்கூறிய விஷயங்களை விரிவாய் அறிய விரும்புவோர் சங்கத்தின் ரிகார்ட்டுகளால் நன்கறியலாம்.

இச்சங்கமுன்னேற்றமடைய முயற்சித்துள்ள மேற்கூறிய யாவர்கட்கும். நன்றி பாராட்டல் சங்கத்தினது தலையாயகடனம்.

சுபம்.



# மஹா சமாஜம்.

1919ளு பிப்ரவரிமீ 22உ புதுப்பாளையம் சமரஸ சன்மார்க்கசங்கத்தின் மஹாசமாஜமானது சென்னை இந்துதியலாஜிகல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதரும் லோகோபகாரி பேப்பர்பத்திராதிபரும், வேதாந்த தர்க்கபோத காசிரியரும், ஆகிய ஸ்ரீமத் கோ. வடிவேலு செட்டியாரவர்கள் அக்ராசனத்தின் கீழ் நடைபெற்றது.

அச்சமயம், புதுநிபந்தனைப்படி 55 மெம்பர்கள் நிரந்தர மெம்பர்களாகப் பத்து ரூபாய்வீதம் கட்டணம்செலுத்தியதின் பேரில், சேர்க்கப்பட்டார்கள், அவர்களின் ஆமோதிப்பின்படி கீழ்க்குறித்தவண்ணம், சட்ட திட்டங்களும் நிர்வாக சபையும், (மெம்பர்களும்) ஏற்படுத்தப்பட்டன, மற்றவிஷயங்கள் அவ்விளம்பரத்திற் கண்டவண்ணமே நடத்தப்பட்டன. இம்மஹா சமாஜத்தில், இச்சட்ட திட்டங்களைத் தீர்மானித்த வண்ணமே, கூடியசீக்கிரத்தில் அச்சிட்டு, கவர்மெண்டு ரிஜிஸ்டர் செய்ய வேண்டுமென்று, ஆமோதிக்கப்பட்டது.

(ஒப்பம்) கோ. வடிவேலு செட்டியார்,

அக்ராசனர்.



# சங்கத்தின் சட்டங்கள்.

## 1. சங்கத்தின் பெயர்.

புதுப்பாளையம் சமரஸ சன்மார்க்க சங்கம்.

## 2. நோக்கம்.

1. ஸ்ரீ சங்கரபகவத் பாதாசாரியரின் வேதாந்தமாகிய, சமரஸ பாவத்தை, விருத்தி செய்வதின் மூலமாய் சைவ, வைஷ்ணவாதி மதத்துவேஷத்தை, நிவர்த்தித்தல்.

2. திராவிட புஸ்தகசாலையை, ஆதரித்து விர்த்திசெய்தல்.

3. பல உபந்நியாஸங்களின் மூலமாய் சன்மார்க்க நெறியைப் போதித்தல்.

4. இராஜபக்தி, தேசபக்தி, தெய்வபக்தி முதலியவைகளை விருத்தி செய்தல்.

5. மேற்கூறிய நோக்கங்கள் நன்கு நிறைவேறும் பொருட்டு, வர்த்தமான பேப்பர்கள், மாத சஞ்சிகைகள் முதலியவற்றைவரவழைத்தல்.

6. பகற்காலத்தில்படிக்க அசௌகரியமுள்ளபிள்ளைகளுக்கும், பாடசாலையிற் படித்து முடிந்த பிள்ளைகளுக்கும்மேலும் தமிழ்ப்பாஷையைக் கற்பிக்க, கூடிய வரையில் முயற்சிப்பது.

7. உள்ளூரிலும், 20 மைல்தூரத்திற்குட்பட்ட வெளியூர்களிலும், சமயம் நேர்ந்துழிச்சென்று, உபந்நியசிப்பது.

8. புஸ்தகசாலைக்கு வந்து அங்கேயேவாசித்துக்கொடுத்துவிட விரும்புவோர்க்குப் புத்தகம் கொடுத்து வாசிக்கச்செய்தல்.

9. விரும்புவோர்க்குக் கூடிய வரையில்திராவிடசாஸ்திரப் பயிற்சி, உபந்நியாஸப் பயிற்சி செய்விப்பது.

## 3. மெம்பர்கள்.

1. உள்ளூரிலும் இவ்வூருக்கு 20 மைலுக்குட்பட்ட வெளியூர்களிலும் உள்ளவர்கள் யாவரும் இதில் மெம்பர்களாகச் சேரலாம், அதிக ஆவலுள்ளவர்கள் எங்கேயிருப்பினும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள், மெம்பர்களாகச் சேர்ந்தவர்கள் இச்சங்க சட்ட திட்டங்களுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

2. இச்சங்கத்தின் அபிவிருத்தியைக் கோரி, ரூபாய் 10 கொடுப்பவர்கள் சங்கத்தின் நிரந்தர மெம்பர்களாவார்கள்.

3. இவ்விதம் சேரும் மெம்பர்களையே இச்சங்கம் எப்போதும் அங்கிகரிக்கும்.

4. ஒவ்வொரு மெம்பரும் சங்கத்தில் சேரும்போது கட்டணம் ரூபாபத்தும், முன்பணமாகவே செலுத்துதல்வேண்டும்

5. அப்படிக்கட்டணம்செலுத்தினமெம்பர்கள், அவரிஷ்டமன்னியில், பின்னுந் தரவேண்டுமென்னும் நிர்ப்பந்தமில்லை.

6. மெம்பர்களால் வசூலிக்கப்படும் கட்டணப்பணத்தை, இச்சங்கத்தின் மூலதனமாக வைத்து, அதனால் வரும் வட்டியையே, சங்கத்தினவசியமான செலவுகளுக்கு உபயோகிக்க வேண்டும்.

## 4. சங்கத்தார்.

1. இச்சங்கத்திற் சேர்ந்த எல்லா மெம்பர்களும், சங்கத்தார் எனப்படுவார்கள், இவர்கள் பொதுக்கூட்டங்கூடி புதிதாய் சட்ட திட்டங்களைச் சேர்க்கவும், அவற்றை மாற்றவும், உரியவர்களாவார்கள். இச்சங்கம் கூடுவதற்குமொத்தமெம்பர்களின் தொகையில் மூன்றில் ஒருபாகத்திற்குக்குறையாத மெம்பர்கள் அவசியம் வந்திருத்தல்வேண்டும்.

2. யாதாவதொரு விஷயத்தைப்பற்றி சங்கம் கூட்ட வேண்டிய அவசியமிருந்தால், 5 மெம்பர்களுக்குக்குறையாமல் கையொப்பமிட்ட மனுவைக் காரியதரிசிக்குக் கூட்டங் கூட்ட, 15 நாளைக்குமுன் அனுப்பினால் அப்போது சங்கம் கூட்டப்படும்.

3. இவ்விதமனுவிற் குறித்த விஷயத்தைப்பற்றி, ஆலோசிப்பதில் மெம்பர்களில், பெருமபாலார் அபிப்பிராயமே, சங்கத்தின் தீர்மானமாக அங்கிகரிக்கப்படும்.

## 5. நிருவாக சபையார்.

1. இச்சங்கத்தின் காரியங்கள் நடைபெறுவதற்குக் கீழ்குறித்தவண்ணம் நிர்வாகசபையொன்றிருத்தல், அவசியம்.

2. 1. அக்கிராசனாதிபதி,
2. உப அக்கிராசனாதிபதி,
3. காரிய தரிசி,
4. உப காரியதரிசி,
5. பொக்கிஷதார்,
6. புஸ்தகக் காப்பாளர்,
7. புஸ்தக உபகாப்பாளர், 3.
8. டைரக்டர்கள், 13.

3. மேற்கூறிய மெம்பர்கள் உள்ளூரில் பதின்மூன்றுபேரும், வெளியூரில் மற்றவர்களுமாகத் தேர்ந்தெடுக்கப் படல் வேண்டும். இவர்கள் சபைகூடி, சங்கசட்டப்படி எல்லாவிஷயங்களையும், தீர்மானஞ்செய்து, அவற்றிற்கிணங்க, சங்ககாரியங்களை நடத்திவரல் வேண்டும். இந்தமீட்டிங்கிலும், நிர்வாக மெம்பர்களின் தொகையில் மூன்றிலொரு பாகத்திற்குக்குறையாமலிருந்தே, தீர்மானிக்கவேண்டும்.

4. ஷை நிர்வாகசபையில் எவ்விதத்திலாயினும், எவர்களாவது காலி ஏற்பட்டால், பதிலாகத்தக்கவர்களை நிர்வாக சபையாரே நியமிக்கலாம்.

5. நிர்வாகசபையில் கீழ்குறித்தவண்ணம் புஸ்தகங்கள் வைத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| 1. வர்த்தமான புஸ்தகம். | 6. சங்கத்திற்குரிய அசையும் பொருள், அசையாப்பொருள் பட்டி. |
| 2. புஸ்தக வகுப்புவாரி ஜாபிதா. | 7. கடிதங்களின் பயல். |
| 3. புஸ்தகசாலையின் தினக்குறிப்பு. | 8. தானலிஸ்டு. |
| 4. வரவு செலவு புஸ்தகம். | 9. மாதாந்தர லிஸ்டு. |
| 5. பேரேடு. | 10. யோக்கியதா பத்திரலிஸ்டு. |

## 6. நிர்வாக சபையார் கவனிக்கக்கூடியவிஷயங்கள்.

1. காரியதரிசி. இவர் சங்கத்தைச்சார்ந்த ஒவ்வொருவிஷயங்களையும் கவனிப்பதோடு, எல்லாமெம்பர்களுக்கும், திருப்திகரமாகச் சங்கவிஷயங்கள் நடந்துவருகின்றனவா வென்று

கவனித்துவருதல்வேண்டும். சங்கத்திற்குரிய உள்ளூர் வெளியூர் சம்பந்தமான, கடிதப்போக்குவரவுகளுக்கும், மற்றெல்லாவிஷயங்களுக்கும், பொறுப்பாளியாகவிருந்து விவகாரங்களைக் கவனித்து வருதல்வேண்டும். சங்கத்தார் கூடும் கூட்டத்திற்கும் நிர்வாகசபையார் கூடும்கூட்டத்திற்கும், நோட்டீஸ் முதலியன அனுப்பவும், ஷை கூட்டங்களில் தீர்மானிக்கப்படும் விஷயங்களை வர்த்தமான புஸ்தகத்தில் பதிவதோடு, பத்திரிகைகளில் தன்னுடைய கையொப்பத்துடன் பிரசுரிக்கவும், பொக்கிஷதார் அடிக்கடி காட்டும் வரவு செலவு கணக்குகளைப் பரீக்ஷை செய்யவும், புத்தகக்காப்பாளர், அடிக்கடிகாட்டும்புத்தகஜாபிதாக்களின்படி புத்தகங்கள் இருப்பிலிருக்கின்றனவா வென்று பரிசோதிக்கவும், சங்கசம்பந்தமான விஷயங்களில் நியாயஸ்தலங்களில் சென்று அமுலுக்குக் கொண்டுவரவும், சங்கத்திற்கு ஊதியமாகவரும் ஸ்தாவரசங்கம சொத்துக்களை, நிர்வாக சபையாரின் ஆமோதிப்பின்படி ஒருவரிடம் தக்கபொறுப்பின் பேரில் கொடுத்து,அக்கிராசனாதிபதி,காரியதரிசி இவர்கள் பேருக்குத்தக்க ரிகார்ட்டு பெறுவதற்கும், நிர்வாகசபையார் தீர்மானப்படி வட்டி ரூபாயைப்பெற்று, பொக்கிஷதார் மூலமாய் வைத்துச் செலவுசெய்யவும், 1 5. 7. 10. கணக்குகளை வைத்திருத்தலுக்கும், இவருக்கு அதிகாரமுண்டு.

2. உபகாரியதரிசி. இவர், காரியதரிசியின் இஷ்டப்படி ஷை காரியங்களில் ஒத்து உழைத்து வருதல்வேண்டும்.

3. பொக்கிஷதார். இவர் சங்கத்திற்காக வசூலாகும் எல்லாப்பணத்தையும், கைப்பற்றிக்கொண்டு, நிருவாகசபையாரால் நியமிக்கப்படும் செலவுகளுக்கு, பணங்கொடுப்பதும், 4. 6. நெ. கணக்குகள் வைத்தலும், அந்தந்தமாதம் வரவு செலவு கணக்கை மறுமாதம் 10-தேதிக்குள், சித்தஞ்செய்து காரியதரிசிக்குக்காண்பித்து, அவர் கையொப்பம் வாங்கிவைத்திருத்தலுக்கும், இவர்க்கு அதிகாரமுண்டு.

4. புத்தகக்காப்பாளர். இவர் 2. 3. 8. 9. நெம்பர் கணக்குகளைப்பதியவும், மாதாந்தர சஞ்சிகைகள், வர்த்தமானபேப்பர்கள் இவற்றைகிரமமாக வருகின்றனவா வென்று பார்க்கவும், பாதுகாக்கவும், மெம்பர்கள், மெம்பர்களல்லாதவர்கள், புத்தகசாலைக்கு வந்து வாசிக்கவிரும்பினால் அவர்க்கு இஷ்டமான புஸ்தகங்களைக்கொடுத்து வாங்கிவைக்கவும், காரியதரி

சிக்கு மாதம் ஒருமுறை, தம்மைடரிகளைக்காட்டி அவர்கையொப்பம் வாங்கிவைக்கவும், சாலையை ஒழுங்காய் வைத்திருக்கவும் உரிமையுடையவராவார்.

5. புத்தக உபகாப்பாளர். இவர் புத்தகக் காப்பாளரின் இஷ்டப்படி ஷை காரியங்களில் ஒத்துழைத்து வருதல்வேண்டும்

6. டைரக்டர்கள். இவர்கள் திருவாகசபை, மஹாசபை, மெம்பர்களுக்குச் சங்கவிஷயங்கள் செவ்வனே நடைபெறுதற்குவேண்டிய விஷயங்களை எடுத்துக்காட்டவும், காரியதரிசி, பொக்கிஷதார், புத்தகக் காப்பாளர் இவர்கள் வேலையைத் தணிக்கைசெய்யவும், சங்கஅபிவிர்த்தியின்பொருட்டு எந்தெந்த காரியங்கள் செய்யவேண்டுமோ, அவற்றைச்செய்யும் அதிகாரமும் உடையவராவார்.

7. அக்கிராஸனாதிபதி. இவர் டைரக்டர்கள், காரியதரிசி இவர்கள் வேலையைத்தணிக்கை செய்யவும், சங்க அபிவிர்த்தியின் பொருட்டு அவர்களுக்குவேண்டிய விஷயங்களை எடுத்துக்காட்டவும், மற்றும்வேண்டியன செய்யவும், யாவரினும் மேம்பட்ட சுதந்திரமுடையவராவர்.

8. உபஅக்கிராஸனாதிபதி. இவர் அக்கிராஸனாதிபதியின் இஷ்டப்படி, ஷை விஷயங்களில் ஒத்துழைப்பதோடு, அவரில்லாத காலத்து, அத்தன்மையைவகிக்கும், யோக்கியதையுடையவராவார்.

## 7. மஹாசபை.

இதுவேண்டும்போது கூடுதல் அவசியம். அச்சமயம் சபையில் ஏதாவது ஒரு உபந்நியாஸமும், குறித்த விஷயமும் சங்கசம்பந்தமான இதரவேலைகளிருந்தால் அவைகளையும், கவனித்தல்வேண்டும். இச்சபை கூடுதற்குக்குறித்த நாளுக்கு ஒரு வாரத்திற்குமுன், காரியதரிசி நோட்டீஸ் மூலமாய் விஷயக் குறிப்புடன், சங்கத்தாரனைவருக்கும் தெரிவித்தலவசியம்-

## 8. வருடப்பூர்த்தி மஹோத்ஸவம்.

இது திருவாக சபையாரால் குறிக்கப்பட்டகாலத்தில், நடாத்துதல்வேண்டும். அச்சமயம், சாதுக்களையும் தக்கபண்டிதர்களையும், வரவழைத்து, சமரஸ உபந்நியாஸங்கள் செய்விக்கப்படல் வேண்டும். வருட மஹோத்ஸவ விளம்பரம் திருவாகஸபையின், தீர்மானப்படி, அக்கிராஸனர், காரியதரி

சியின் கையொப்பத்துடன் வெளிப்படுத்துதல்வேண்டும். அச்சமயம் சங்க அறிக்கைப்பத்திரமும் வாசித்தல்வேண்டும். (அம்மஹோத்ஸவத்திற்கு வித்வத் சபாநாயகர், கனம் கோ. வடிவேலு செட்டியாரவர்களையே நியமித்தல்வேண்டும்.)

## 9. பொது விஷயங்கள்.

1. நிருவாகசபை மெம்பர்கள், சங்கவிஷயமாய் தவறாக நடந்தார்களேயானால், அவர்களை அந்த அந்தஸ்திலிருந்து, நிவர்த்திக்கும் அதிகாரம், மஹாசபையாருக்கு உண்டு.

2. நிருவாக சபையானது மஹாசபையாரால், மூன்று வருஷத்திற்கொருமுறை தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும்.

3. சங்கத்தின் பெயர்வாய்ந்த முத்திரையொன்று அவசியம் இருத்தல்வேண்டும். இதனைச்சங்கத்தைச்சார்ந்த சகலபுத்தகங்கள், தஸ்தாவேஜுக்கள் முதலியவற்றிற்கும், உபயோகித்தல் வேண்டும். இது காரியதரிசியிடம் இருத்தல்வேண்டும்.

4. சங்கத்தின் மூலதனம் வைத்திருப்பவர், சங்கத்தைச் சார்ந்த மெம்பராகவே இருத்தல்வேண்டும். அவர் நிதிக்குத் தக்கபொறுப்பு காட்டி காரியதரிசி, அக்கிராசனாதிபதி, இவர்கள் பேருக்குத் தக்க ரிக்கார்ட்டு செய்துதரல்வேண்டும். எப்போதும் முக்கால் வட்டிக்கு குறையாமலேயே, கொடுக்க வேண்டும். நிர்வாகசபையின் தீர்மானப்படி வட்டி ரூபாயை காரியதரிசியிடம் குறித்தகாலத்தில் கொடுப்பதோடு, அசல் நிதியை நிருவாகசபையார்வேண்டும்போது, ஒருமாததவணைக்குள் கொடுத்தல்வேண்டும்.

5. காரியதரிசி, பொக்கிஷதார், புத்தகக்காப்பாளர், இவர்களால் தத்தம் இடமிருக்கும், டைரிகளில் அடித்தல், திருத்தல் முதலிய கெடுதல் தெய்வீகமாக நேர்ந்தால், உடனே தத்தம் மேலதிகாரிக்குக் காண்பித்து அவர் ஒப்புக்கொண்டதற்கு அடையாளமாக அவர்களின் இன்ஷியல் வாங்கிவைப்பதுடன் பின் உண்டாம் கெடுதல் களுக்குத் தாங்களே ஜவாப்தாரியாகவும் இருத்தல்வேண்டும்.

6. ஒவ்வொரு சபைகூடும்போதும் அவ்வமயம் வந்திருப்பவர்களில் ஒருவரைச் சபாநாயகராக தேர்ந்தெடுத்தல்வேண்டும்.

7. சில்லரை செலவுகளுக்காகச் சங்கப்பணத்தில் காரியதரிசியிடம் (5 ஐந்துரூபாயும்) பொக்கிஷதாரரிடத்தில்(10 ரூபா

யும்) கையிருப்பில் இருக்கலாம், மீதி ரூபாய்களை, உடனே தக்க ரிகார்டின்பேரில் வட்டிக்குக் கொடுத்தல் வேண்டும், தவறில் சேவிங்ஸ் பாங்கியிலாவது செலுத்துதல் வேண்டும்.

8. சங்கத்தின் வருஷோற்சவம், நிரந்தர மெம்பர்கள் எவ்விடத்தில் கூட்டவேண்டும் என்று விரும்புகின்றார்களோ அவ்வவ்விடங்களில் நடத்தலாம். ஆனால் அந்த வருஷோற்சவ செலவைச் சங்கசெலவிலல்லாது, அவ்விடத்தவர் பொறுப்பில் (செலவில்) நடத்துதல் வேண்டும், சங்கத்தில் மாத்திரம் சங்கச் செலவில் நடத்தலாம்.

9, மற்றவிஷயங்களில்எதுவெது எந்தெந்தசமயத்தில்செய்யவேண்டும் என்று நிருவாக சபையாருக்கு தோன்றுகிறதோ அதுவது அவ்வவ்விதமாகவும் நடத்திக்கொள்ளலாம்.

10. இச்சங்க அபிவிர்த்திக்காக மேற்கூறிய எல்லா நிபந்தனைகளையும் ஒற்றுமையுடன் எல்லாமெம்பர்களும் அநுசரித்து வருவதுடன், இனி அநுபோகத்தையும், சந்தர்ப்பத்தையும் ஒட்டி, ஏற்படும் எல்லா நிபந்தனைகட்கும், கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்,

## 10. கிளைச்சங்கங்கள்.

1. வெளியூர்களில் தகுந்தமெம்பர்களிருக்கும் பக்ஷத்தில் அவ்விடங்களில் கிளைச்சங்கங்களேற்படுத் தப்படும். ஆனால் அக்கிளைச்சங்கங்களை அதைச்சார்ந்த மெம்பர்களேபோஷித்து வரல்வேண்டும். இதில் மஹாசங்கம் கூடவேண்டின் தலைச்சங்கத்தார், கிளைச்சங்கச்செலவிலேயே உபந்நியாசகரை அனுப்புதல்வேண்டும்.

2. உபசங்கங்கள் தலைச்சங்கக் கருத்திற்கு முரணாது, அவ்வவ்வூருக்குத் தக்கபடி, அமைத்துக்கொள்ளல் வேண்டும் இப்படி ஏற்படுத்திக்கொண்ட காபி ஒன்று, தலைச்சங்கத்திற்கு அனுப்பிவைத்தல்வேண்டும. ஒவ்வொருகிளைச்சங்கமும தலைச்சங்கத்திற்கு வருஷத்திற்கொருமுறை சந்தாவாகரூபா ஒன்று செலுத்துதல் வேண்டும். ஒவ்வொரு கிளைச்சங்கத்தவர்க்கும் தலைச்சங்கத்தவரால், அங்கீகாரச்சீட்டு அனுப்பப்படும்.

3, கூடுமானால், தலைச்சங்கத்தார் நிர்வாகசபை மெம்பரில் ஒருவரை நியமித்தனுப்பி, கிளைச்சங்கங்களைச் சகலவிஷயத்திலும், பார்வையிடச்செய்யப்படும்.

# சங்கமெம்பர்களின் பெயர்.

| நெ. | பெயர். | ஹோதா. | இருப்பிடம். | சந். ரூபா. |
|---|---|---|---|---|
| 1 | பிரம்மஸ்ரீ, ச; சுப்ரமணிய ஐயர் | ஹெட்மாஸ்டர், மாடல்ஸ்கூல். | சென்னை | 10 |
| 2 | வெங்கடசுப்ரமணியஐயர் | வித்வான் | களியாம்பூண்டி | 10 |
| 3 | வெ. க. கிருஷ்ணமாசாரியர் | வித்வான் | நெம்மலி | 10 |
| 4 | ம-ா-ா-ஸ்ரீ, நா. க. குமாரசாமிபிள்ளையார் | விவசாயம் | நாயகம்பாளையம் | 10 |
| 5 | செ. வாசுதேவமுதலியார் | ஷை | வயலாத்தூர் | 10 |
| 6 | வ. இரத்தினமுதலியார் | ஷை | வங்காரம் | 10 |
| 7 | O ரா. குப்புசாமிபிள்ளையார் | ஷை | புதுப்பாளையம் | 10 |
| 8 | லிங்காரெட்டியார் | ஷை | களியாம்பூண்டி | 10 |
| 9 | அ. ராஜமாணிக்கசெட்டியார் | வர்த்தகம் | புதுப்பாளையம் | 10 |
| 10 | சி. கந்தசாமிமுதலியார் | விவசாயம் | ஷை | 10 |
| 11 | பூ. செ. கங்காதரபிள்ளையார் | ஷை | பூனைத்தாங்கல் | 10 |
| 12 | பு. மூ. முருகேசபிள்ளையார் | ஷை | புதுப்பாளையம் | 10 |
| 13 | ம. க. நடராஜமுதலியார் | ஷை | மண்ணூர் | 10 |
| 14 | தா. முருகேசமுதலியார் | ஷை | புத்துப்பாளையம் | 10 |
| 15 | ஏ. நடேசமுதலியார் | ஷை | பூனைத்தாங்கல் | 10 |
| 16 | பூ. இரத்தினமுதலியார் | ஷை | ஷை | 10 |
| 17 | பூ. இர. கங்காதரபிள்ளையார் | ஷை | ஷை | 10 |
| 18 | பா. முருகப்பமுதலியார் | ஷை | புதுப்பாளையம் | 10 |
| 19 | திரு. நாராயணமுதலியார் | ஷை | ஷை | 10 |
| 20 | சா. குப்புசாமி முதலியார் | ஷை | பூனைத் தாங்கல் | 10 |
| 21 | O கணபதி உடையான் | ஷை | தர்மச்சேரி | 10 |
| 22 | பா. கணபதிமுதலியார் | ஷை | புதுப்பாளையம் | 10 |
| 23 | கி. தர்மலிங்க செட்டியார் | வர்த்தகம். | ஷை | 10 |

| நெ. | பெயர். | ஹோதா. | இருப்பிடம். | சந். ரூபா. |
|---|---|---|---|---|
| | ம-ள-ள-ஸ்ரீ, | | | |
| 24 | வ. குப்புசாமிமுதலியார் | விவசாயம் | புதுப்பாளையம் | 10 |
| 25 | பா. க. சுப்ரமணியபிள்ளையார் | ௸ | ௸ | 10 |
| 26 | அண். வேதாசல பிள்ளையார் | ௸ | ௸ | 10 |
| 27 | வ. வெங்கிடாசல பிள்ளையார் | ௸ | ௸ | 10 |
| 28 | ஏ. ராமாத்தை முதலியார் | ௸ | ஏழாச்சேரி | 10 |
| 29 | க. கோவிந்தமுதலியார் | விவசாயம். | பாலூர் | 10 |
| 30 | அ. சின்னையாசெட்டியார் | ௸ | புதுப்பாளையம் | 10 |
| 31 | அ. இரங்கசாமிமுதலியார் | மணியம். | ௸ | 10 |
| 32 | க. குப்புசாமி முதலியார் | உபாத்தியார் | ௸ | 10 |
| 33 | க. பரசுராம முதலியார் | விவசாயம் | ௸ | 10 |
| 34 | சோ. தங்கவேலு பிள்ளையார் | மணியம் | புதுப்பாளையம் | 10 |
| 35 | பூ. இராமசாமிமுதலியார் | விவசாயம் | பூனைத்தாங்கல் | 10 |
| 36 | அ. வேதாசலமுதலியார் | வர்த்தகம் | புதுப்பாளையம் | 10 |
| 37 | ப. பொன்னுசாமி பிள்ளையார் | விவசாயம் | ௸ | 10 |
| 38 | சு. நடராஜ முதலியார் | ௸ | ௸ | 10 |
| 39 | தொ. கிருஷ்ணசாமி பிள்ளை | ௸ | ௸ | 10 |
| 40 | தொ. முனிசாமி பிள்ளையார் | ௸ | ௸ | 10 |
| 41 | ஏ. முத்துவேலு பிள்ளையார் | ௸ | ௸ | 10 |
| 42 | வி. இரங்கசாமிமுதலியார் | ௸ | ௸ | 10 |
| 43 | செ. மு. கைலாச பிள்ளையார் | வான சாஸ்திரி | செங்கட்டாங் குண்டில். | 10 |
| 44 | பு. நாட்டார்பச்சையப்பபிள்ளை | தர்மகர்த்தா கடம்பர் கோயில். | புத்தளி | 10 |
| 45 | மே. வ. கிருஷ்ணசாமிபிள்ளை | விவசாயம் | மேனல்லூர் | 10 |
| 46 | செ. அருணாசலமுதலியார் | ௸ | கல்பாக்கம் | 10 |
| 47 | பெரியதம்பி முதலியார் | ௸ | உக்கல் | 10 |
| 48 | பு. கிஷ்டப்பமுதலியார் | ௸ | புன்னை | 10 |
| 49 | வண். அப்பாசாமி பிள்ளையார் | ௸ | புதுப்பாளையம் | 10 |
| 50 | ஆ. அர்ச்சுன முதலியார் | ௸ | ஆதவபாக்கம் | 10 |
| 51 | ரா. சிங்காரமுதலியார் | ௸ | புதுப்பாளையம் | 10 |
| 52 | க. ஆதிமூலமுதலியார் | ௸ | ௸ | 10 |
| 53 | ப. மாசிலாமணி பிள்ளையார் | கவிராஜர் | ௸ | 10 |
| 54 | சு. மாசிலாமணி பிள்ளையார் | விவசாயம் | ௸ | 10 |
| 55 | O வ. கிரு. முனிசாமிபிள்ளை | ௸ | ௸ | 10 |

☞ O இக்குறிப்புடைய மெம்பர்கள் காலஞ்சென்றமைக்கு சங்கத்தார் மிக்க விசனிக்கிறார்கள்.



### மஹா சபையார்

## 22-2-19ல் எலக்ஷனில் தேர்ந்தெடுத்த

# நிர்வாக சபையார்.

1. அக்கிராசனாதிபதி பிர்ம்மஸ்ரீ ந. சுப்ரமணிய ஐயரவர்கள் [கள்
2. உப அக்கிராசனாதிபதி ,, ரெ. வெ. கிருஷ்ணமாச்சாரியரவர்
3 காரியதரிசி ஸ்ரீமான் ப. மாசிலாமணி முதலியார்
4. உப காரியதரிசி ஸ்ரீமான் க. குப்புசாமி முதலியார்
5. பொக்கிஷதார் ,, க. பரசுராம முதலியார்
6. புத்தகக்காப்பாளர் ,, வி. இரங்கசாமி முதலியார்
7. புத்தக உபகாப்பாளர்
   - ஸ்ரீமான் சு. நடராஜ முதலியார்
   - ,, அ. வேதாசல முதலியார்
   - ,, அ. இரங்கசாமி முதலியார்

## 8. டைரெக்டர்கள்.

ம-ள-ள-ஸ்ரீ,

1 நா. க. குமாரசாமி முதலியார்
2 ட. க. நடேச முதலியார்
3 உ. பெரியதம்பி முதலியார்
4 வ. வாசுதேவ முதலியார்
5 பு. நா. பச்சையப்ப முதலியார்
6 வ. இரத்தின முதலியார்
7 பூ. இரத்தின முதலியார்

ம-ள-ள-ஸ்ரீ

8 தா. முருகேச முதலியார்
9 சு. மாசிலாமணி முதலியார்
10 பா. முருகப்ப முதலியார்
11 ரா. சிங்கார முதலியார்
12 வ. வெங்கடாசலமுதலியார்
13 திரு நாராயண முதலியார்



## சங்கத்தின் வாழ்த்துப் பாசுரம்.

இது

திருக்கைலாய பரம்பரை திருவாவடுதுறை யாதீனம்

மஹா வித்வான்

ஸ்ரீமான். மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்

மாணாக்கரிலொருவரும்

காஞ்சிபுரம் பச்சையப்பன் ஹைஸ்கூல்

தலைமைத் தமிழ்ப்பண்டிதரும்,

ஆய, வெண்பாப்புலி

ஸ்ரீமான். தி. சு. வேலுசாமிப் பிள்ளையவர்களால்

இயற்றப்பட்டது.

வெண்பா

புதுப்பாளையத் தொளிரும் புத்தக சாலை
விதுப்பாற் [illegible]றையின் விளங்கித்—துதிப்பார்ந்த
மன்கலைக ளோங்குவபோற் வா[illegible]
றென்கலைக ளோங்குகவே சேர்ந்து.

சுபம்.

---

குறிப்பு:—இம்மஹா சமாஜம கூட்ட, பழைய மெம்பர்களுடன் தளரா முயற்சியோடுழைத்தவர்கள் ம-ா-ா-ஸ்ரீ. கா. க. குமாரசாமி முதலியார் ம-ா-ா-ஸ்ரீ தா. சு. முருகேச முதலியார், ம-ா-ா-ஸ்ரீ [illegible]. முருகப்ப முதலியார், ம-ா-ா-ஸ்ரீ ம. தணிகாசல முதலியார் இவர்களுக்கு, சங்கம் நன்றி பாராட்டற்பாலது.